# போர் ஓய்வை கண்காணிக்க செஞ்சிலுவை சங்கம் மறுப்பு!

[ஜெனீவா]
விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்த யுத்த நிறுத்தத்தை கண்காணிக்குமாறு மேற்படி சங்கத்தை இலங்கை அரசாங்கம் கடிதமூலம்கேட்டிருந்தது.

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்; 32 மார்கழி 25 ஜ. ஆகிர் பிறை 22 இதழ்; 259
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-1-1991

## யாழ்-கொழும்பு பயணிகள் வவுனியாவில் அவதி

[வவுனியா]
யாழ்-கொழும்பு பிரயாணிகள் வவுனியாவில் இராணுவத்தினரின் கெடுபிடிகளினால் அவதியுற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பணத்திலிருந்து பயணம் செய்வோர் வவுனியாவில் இராணுவத்தினரால் சில நாட்கள் தடுத்துவைக்கப்பட்டு கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதனால் பெருந்தொகையா

(4-ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை தொடரும்

## அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரப்படலாம் என்று பாதுகாப்பு இணையமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன கொழும்பில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற இனப்பிரச்னை தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

"விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையாமல் போர்நிறுத்தம் செய்ய வேண்டாமென இராணுவத்தினர் அரசாங்கத்தைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்த அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது!

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து புலிகள் தாங்கள் அனு

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் குறித்து இந்தியா தொடர்பு

[சென்னை]
இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக இந்தியா இலங்கையுடன் தொடர்பு கொண்டுள்ளது'

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் இலங்கை அரசுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் இலங்கையில் சமாதான முறையில் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கே இந்தியா விரும்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது,(எஸ்)

## வடக்கிற்கு 200 லொறிகளில் உணவுப்பொருள்

(கொழும்பு)
வடபகுதிக்கு போதியளவு உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வருவதாக அத்தியாவசிய

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தத்தை கைவிடுமாறு ஸ்ரீலங்கா படையினர் கோரிக்கை

(கொழும்பு)
போர் நிறுத்தத்தைக் கைவிடுமாறு ஸ்ரீலங்கா படையினர் அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாக இருந்தால் அரசியல் பிரிவுடன் மட்டும் நடத்தாமல் அவர்களின் இராணுவத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று படையினர் அரசினை வற்புறுத்தி வருகின்றனர். (ரி)

## இராணுவம் சுட்டு ஒருவர் பலி

[திருகோணமலை]
திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவு அந்திமோட்டை பாடசாலை அருகில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவம் சுட்டு ஒருவர் பலியானார்.

கடந்த 5ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் வல்லிபுரம் என்பவரே பலியானவராவர். (வி)

## நாளை முதல் 3-ம் கட்ட இலவச நிவாரணம் அரிசிக்குப் பதில் மா

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்திலுள்ள சகலருக்குமான 3-ம் கட்ட விசேஷ இலவச உலர் உணவுப் பொருள் விநியோகம் நாளை 10-ந் திகதியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

3-ம் கட்ட விசேஷ இலவச உணவுப்பொருள் விநியோகத்தில் இம்முறை அரிசி வழங்கப்படமாட்டாது. அரிசி போதியளவு கையிருப்பில் இல்லாத காரணத்தால் அதற்கு பதிலாக கோதுமைமா வழங்கப்படவுள்ளது.

இம்முறை ஒரு அங்கத்தவருக்கு 2 கி. மா, 3/4 கி சீனி, ¼ கி; பருப்பு, ¼ லீற் மண்ணெண்ணை, தேயிலை, சவர்க்காரம் ஆகியவை வழங்கப்படவுள்ளது.

இரண்டு அங்கத்தவர் குடும்பத்துக்கு 4 கி. மா, 2 கி. சீனி 1/2 கி. பருப்பு ½ லீற் மண்ணெண்ணை, தேயிலை, சவர்க்காரம் ஆகியவை வழங்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பெண் மீது மானபங்கம்

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதியிலுள்ள உன்னிச்சை என்ற இடத்துக்கு ரோந்துவந்த சிங்கள இராணுவத்தினரும், ரெலோவும் அவ்விடத்தைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவரை அவர் கணவனின் முன்

(4ம் பக்கம் பார்க்க)

## வளைகுடா யுத்தம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)
வளைகுடாவில் யுத்தம் ஏற்பட்டால் இலங்கையை எதிர்நோக்கவிருக்கும் பிரச்சனைகள் குறித்து ஏழு அமைச்சுக்கள் தமது பாதிப்புப் பற்றி ஒரு வாரத்தில் அறிக்கை

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ் நகரில் மட்டும் 35 பாடசாலைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)
கடந்த வருடம் ஜூன் மாதம் தொடங்கி கடந்த டிசம்பர் வரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் 35 பாடசாலைகள், சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்துள்ளது.

ஐந்து கோடி ரூபாவுக்கு மேற்பட்ட சேதங்கள் இந்த பாடசாலைகளில் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. (153)

## நுவரெலியா தொகுதி வாக்காளர் இடாப்பிலிருந்து தமிழர்கள் பெயர் நீக்கம்

(கொழும்பு)
நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் 1990ம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தமிழ் வாக்காளர்களின் தொகை முன்னைய வருடங்களிலும் பார்க்க இம்முறை குறைவாக காணப்படுகிறது.

அநேக புதிய வாக்காளர்களின் பெயர்கள் இம்முறை சேர்க்கப்படவில்லையென்றும், சில பகுதிகளில் பழைய தமிழ் வாக்காளர்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவிர பொலிஸ் ரோந்து

(சென்னை)
தென்னார்காடு மாவட்டம் பிச்சாவரத்திலிருந்துராமநாதபுரம் மாவட்டம்வரை இலங்கைப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸ் ரோந்து பலப்படுத்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி வடக்கு முத்துத்தம்பி பாடசாலைக்கு அண்மையில் 4½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கி. அரிச்சந்திரன், அரசடி லேன், தாவடி வடக்கு கொக்குவில்: (சி-4246)

### தேவை

குரக்கன், சோயா, சோளம் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்! அண்ணா பாம், இணுவில். (ஏ-975)

### ஆங்கிலவகுப்புகள்

கொழும்பு. வத்தளை, குருநாகல், மட்டுநகர் பிரபல ஆசிரியர் மேரி ஆனந்தன் மூன்று பாட நெறிகளை உடன் ஆரம்பிக்கிறார். By - pass to Mastery of English Part II, Spoken English with Lingual Training, G. C. E. O/L & A/L வினாவிடை. மாணவர் தொடர்பு: 10ம் திகதிக்குமுன் ஞானபண்டித வைத்தியசாலை குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (சி-4242)

### தவறிவிட்டது

எனது பேஸ். அடையாள அட்டை இல. 561693005 V காசோலை சிறுதொகை பணத்துடன் கேரதீவு பாதையில் பிரயாணத்தின்போது 5-1-1991இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். மார்க்கண்டு புவனேந்திரன் மே/பா P நேசரத்தினம், விழிசுட்டி, சங்கானை. (சி-4249)


## முதுமாணியில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக முதுமாணி (கல்வி) பரீட்சையில் திரு. கே கந்தசாமி சித்தியடைந்துள்ளார்.

முதுமாணி(தமிழ்) பரீட்சையில் திரு எம். இரகுநாதன் சித்தியடைந்துள்ளார்.

## மனனப் போட்டி

[யாழ்ப்பாணம்]

ஆவரங்கால் சிவன்கோவில் பஜனைக் குழுவினரால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட திருவெம்பாவை மனனப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

## நிதி உதவி

(சித்தன்கேணி)

தென் தமிழ் ஈழத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக சங்கானை உதவி அரசாங்கஅதிபர் பணி மனையைச்சேர்ந்த சகல ஊழியர்களும் ஒரு நாள் வேதனத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (137)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்; வே. மாரிமுத்து, உப-தலைவர்: பொ. திருச்செல்வம், செயலாளர்: கே. சிவலிங்கம், உப-செயலாளர்: மா. குணரத்தினம், பொருளாளர்: நா. பரமசிவம், ஆலோசகர்; கு. மகாலிங்கம், கணக்குப் பரிசோதகர்: திரு க. இரத்தினம். நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி சி பொற்கொடி, திருமதி க.சுபத்திரை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஆணையாளர் வேண்டுகோள்

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் நன்கொடைபெறும் பதிவு செய்யப்பட்ட 807 சனசமூக நிலையங்களும் தங்களது வருடாந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தை ஜனவரி மாதம் 11ந் திகதிக்கு முன்னதாக நடத்தி முடிக்க வேண்டுமென யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.


## அறிவித்தல்

### காரைநகர் சிவன்கோவில்

(ஈழத்துச் சிதம்பரம்)

காரைநகர் சிவன்கோவில் [ஈழத்துச் சிதம்பரம்] இராசகோபுர கும்பாபிஷேகமும் மகா கும்பாபிஷேகமும் பிரமோதூத வருடம் தைமாதம் 21-ம் திகதி (3-2-1991) ஞாயிற்றுக்கிழமை திருவருள் துணை கொண்டு நடைபெறவிருக்கின்றது மகாகும்பாபிஷேகத்திற்கு தேவையான நிதியுதவி பொருளுதவியை கீழ்க்காண்பவர்களிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

திரு. சு. முருகேசு (தலைவர்)
காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச்சபை,
வலந்தலை, காரைநகர்.

திரு. வே. சிவசுப்பிரமணியம் (பொருளாளர்)
காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச்சபை,
நடுத்தெரு. காரைநகர்.

து. முருகேசு, ஆ. அம்பலவிமுருகன்
ஆதீனகர்த்தாக்கள்
காரைநகர் சிவன்கோவில்,

வே செல்வநாயகம்
செயலாளர்,
காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச்சபை,
[சி-4248]

## தொழிற் பயிற்சிகள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். காலம் 4 மாதம்.

★ Computer Programming in Basic Language

60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும், காலம்: 4 மாதம்.

★ றீவைண்டிங்

மின்மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர், டைனமோ றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 4 மாதம்.

★ எலக்ரிக்கல் வயறிங்

வீட்டு மின்சார வேலை மின்சார பொருட்களை திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்; காலம்: 2 மாதம்.

★ SPOKEN ENGLISH

1) Vocabulary
2) Basic Grammar
3) Reading
4) Writting
5) Conversation
6) Etiquette (manners)

காலம்: 2 மாதம் (முழு நேர வகுப்பு)

★ DIPLOMA IN DRAUGHTSMAN SHIP

காலம்: 4 மாதம்.

மீண்டும் ஆரம்பம்: 11-01-91 (கிழமை நாள்)
12-01-91 (சனி, ஞாயிறு)

**Jaffna Technical Institute**
ஸ்ரான்லி வீதி
(றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம் (எ-972)

# Jaffna College Institute of Technology

## VADDUKODDAI

FullTime Technical Educational Institute Offering Following Facilities

★ FULLY EQUIPPED LABORATORIES
★ HOSTEL FACILITIES FOR MALE & FEMALE STUDENTS
★ LIBRARY
★ SPORTS & GAMES & CULTURAL ACTIVITIES

பின்வரும் தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் February 1991இல் ஆரம்பமாகின்றன.

### 1. Technician Diploma Courses

(ஆங்கில மூலம்)

NDT தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளுக்கேற்பவும் அமைக்கப்பட்டது.

(i) Electronics & Communication
(ii) Mechanical Engineering
(iii) Electrical Engineering
(iv) Civil Engineering (2 years)

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 3 வருடங்கள்

### 2. Diploma Courses

(ஆங்கில மூலம்)

(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing (Basic, Cobol & d Base III+) Practicals on IBM - PC, AT & MAT 386 Industrial Controller.

கல்வித்தகைமை: G. C. E. (O/L) கணிதத்தில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம்: ONE YEAR

### 3. Engineering Course

(6 Semesters)

Full time, Preparing Students for E. C. E. Part I (London) Exam, & I. E. S. L. Part I Exam.

Qualification: G. C E. (A/L) Maths with 3 or 4 passes in two Sittings

### 4. Tech. Certificate Course

(ஆங்கில மூலம்)

(i) Radio & T. V. Servicing
(ii) Automobile Practice
(iii) A/C & Refrigeration Practice.

கல்வித்தகைமை: G. C. E. (O/L) with Maths & Science

காலம்: One Year.

### 5. Craft Certificate Courses

(தமிழ் மூலம்)

(i) இயந்திரசாலைப் பயிற்சி (Machine Shop Practice)
(ii) ஒட்டுநர் பயிற்சி (Welding Practice)
(iii) மின்னிணைப்பு (Wiring Practice)

கல்வித்தகைமை: G. C. E. (O/L) படித்திருத்தல் வேண்டும்.

காலம்: ஒரு வருடம்.

முக்கிய குறிப்பு: நிறுவன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் மட்டும் விண்ணப்பிக்கவும்.

## விண்ணப்ப முடிவு திகதி: 25-01-1991

(ஏ 973)

- பணிப்பாளர்.

## யுத்தநிறுத்த 'கீ'றல்கள்!

மிகப் பெறுமதி வாய்ந்த புத்தம்புதிய 'ஒறிஜினல்' பொருட்களில் கீறல்கள் விழுந்து விட்டால் மனம் ஒடிந்துவிடுவதுடன், அதன் பெறுமதியிலும் நம்பகத் தன்மையிலும் சந்தேகம் விழுந்துவிடுவது இயல்பு!

தற்போது அமுலில் இருந்துவரும் 'யுத்த நிறுத்தம்' என்ற பெறுமதிவாய்ந்த மிக நெகிழ்வான நிலவரத்தில் யுத்த மீறல்கள் என்ற கீறல்கள் விழுந்து வருவதான செய்திகளை அடுத்து மக்கள் மதியில் சஞ்சலங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளது.

''வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சிங்கள இராணுவம் அடுத்தடுத்து, யுத்த மீறல்களைச்செய்து வருகின்ற போதிலும் நாம் தொடர்ந்து யுத்த நிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடித்து வருகிறோம்'' என்று விடுதலைப் புலிகள் தலைமைப் பீடம் தெரிவித்துள்ளதுடன், அரசபடையினரின் பல யுத்த மீறல்களைக் குறித்து, நீண்ட பட்டியலையும் ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது.

இதுவரையில் அரச படையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகி, ஆறு விடுதலைப்புலிகள் கொலலப்பட்டுள்ளனர் என்பதை துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் உண்மையான அமைதியை விரும்பி, தாமாகவே முன்வந்து அமுல் செய்த யுத்தநிறுத்தத்தின் நம்பகத்தன்மையை சுண்டிப் பார்க்கும் சபல நோக்குடன், அரசும் அதன் படையினரும் இத்தகைய யுத்த மீறல்களை திட்டமிட்டு செயற்படுத்துகின்றனரோ என்ற சந்தேகம் வேறு மக்கள் மனதில் எழுந்துள்ளது.

பிறரை நம்பி நடக்க அஞ்சுபவர்கள் முதலில் தம்மைப் பிறர் நம்ப நடந்து காட்டவேண்டும்.

காலவரையறையற்ற யுத்தநிறுத்தத்திற்கு பதிலாக தனது சந்தேகசபலத்தில்வெறும் வாராந்த தாக்குதல் நிறுத்தம் என்பதை மட்டும் அமுல் செய்ய முன்வந்த அரசு அதனையும், முறையாகக் கடைப்பிடிக்கத் தவறிக் கொண்டு பிறர்மீது பழி போடுவது முறையற்றது

எனவே ஸ்ரீலங்கா அரசும், அதன் முப்படையினரும், யுத்தநிறுத்தம் என்ற மிகப்பெறுமதி வாய்ந்த, நெகிழ்வான சூழ்நிலையை கீறிக்கிழித்து இன்று இருப்பதை விட இன்னும் படுபயங்கர சூழ்நிலையை உருவாக்க வழிவகுக்காது இருக்கும் மதியை நல்வழியில் பயன்படுத்துவது எல்லோர்க்கும் நல்லது.

— மயூரன்

## இடமாற்றம்

(கொழும்புத்துறை)

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலய அதிபர் திரு கா. கணேசதாசன் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (154)

# "கனடாவும், பிரான்சும் ஓர் கனவுலக வாழ்க்கை:

# இந்த மண்ணை நேசிப்போம்;

# பாதுகாப்போம்; வளம்படுத்துவோம்"

(நமது நாட்டு இளைஞர்களும் யுவதிகளும் வெளிநாட்டை நோக்கிப் படை எடுத்துக்கொண்டிருக்கிறர்கள். இவர்கள் இந்த நாட்டில் படித்து பட்டம் பெற்று, இந்த மண்ணை நேசிக்காமல், பாதுகாக்காமல், வளம்படுத்தாமல் தமிழினத்தின் நீண்டகாலக் கனவைக் கருத்தில் கொள்ளாமல் இலட்சக்கணக்கில் செலவு செய்து சிதறடிக்கிறார்கள். தமிழினத்துக்கு இது பெரும் சாபக்கேடு. இந்த வெளிநாடு பற்றி இவர்கள் சொல்வதைப் பார்ப்போம்.)

### 'பிரான்ஸ்' இளைஞர் கருத்து

''நான் வெளிநாடு சென்று விட்டு மீண்டும் இலங்கைக்கு வந்திருக்கிறேன். இது ஒரு அக்கரைப் பச்சை. முதலில் சிங்கப்பூருக்குச் சென்று அங்கிருந்து பிரான்சுக்குச் சென்றேன்.''

'சிங்கப்பூரில் எமது தமிழ் இளைஞர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் தெரியுமா? மூக்காலவாசிப் பேர் கட்டிடம் கட்டும் தொழில்கள் தான் செய்கிறார்கள். காசு என்ற பெயரால் இரத்தத்தை உடிஞ்சிப்போடுவார்கள். 4000 ரூபா மட்டும் சம்பளம். 2000 மிச்சம் பிடிக்கலாம். இங்கு சாதாரண வீட்டுச் செலவு 5000 ரூபா, அவர்கள் அங்கு போவதிலும் பார்க்க இங்கே உழைத்துக் கொள்ளலாம்.

இது காணாது என்று பிரான்சுக்குப் போனேன். சில இளைஞர்கள் இங்கு காசு அனுப்புகிறார்கள் என்பது உண்மை தான். சிலர் போதை வஸ்துக் கடத்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுகிறார்கள். இதில் பிடிபட்டுச் சிலர் சிறையும் அனுபவிக்கிறார்கள்.

நல்லவர்களாக இங்கிலாந்துக்குச் சென்றவர்கள் எல்லாப தரக்குறைவான எமது கலாசாரத்துக்கு ஒவ்வாத பழக்கங்களில் ஈடுபடுவார்கள். அங்கிருப்பவர்கள் பலர் மதுப் பிரியர்களாக மாறுகிறார்கள்.

சாப்பாட்டுக் கோப்பை கழுவுதல், வெள்ளைக்கார சமையல்காரர்களுக்கு உதவியாளர்களாக இருத்தல், துப்புரவு வேலை செய்தல் போன்ற எடுபிடி வேலைகள்தான் செய்கிறார்கள். ஆயிரம் ரூபா சம்பளம் கொடுத்தாலும் அவர்கள் அந்தத் தொழிலை இங்கு செய்வார்களா?

இங்கு 60,000 தமிழர்கள் வசிக்கிறார்கள். இங்கு வீடு ஒன்று வாடகைக்கு எடுக்க வேண்டுமென்றால் இருபத்தையாயிரம் ரூபா இலங்கைப் பணம் வேண்டும். அறை வாடகை கூட பதினையாயிரம் ரூபா மட்டில் வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் பிரான்ஸ் நாட்டுப் பெண்களை திருமணம் செய்கிறார்கள். வெளிநாடு என்ற போர்வையில் எமது இனம் அழிக்கப்படுகிறது! கலாசாரம் சிதறடிக்கப்படுகிறது. நல்லவர்கள் தீயவர்களாக மாறுகிறார்கள். மொத்தத்தில் இவர்களால் ஈழத்தமிழினத்துக்குப் பெரும் நட்டம் தான்.

### கனடா இளைஞர் கருத்து

''இங்கு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் கூட பணத்துக்காகக் தொட்டாட்டு வேலைகள் செய்கிறார்கள். இங்கு படித்தபுத்திஜீவிகள் எமது மண்ணுக்குத் தங்கள் அறிவைப் பயன்படுத்தாமல் இருப்பது எவ்வளவு இழப்பாகும்.

அநேக இலங்கைத் தமிழர்கள் பார்சல் கட்டுதல், கூலி வேலை செய்தல், உடுப்புத் தைத்தல், ஸ்திரிக்கை செய்தல், பாத்திரங்கள் துப்புரவாக்கல், போன்ற தொழில்கள் செய்கிறார்கள். இத்தொழில்கள்சிறப்புக்கலிதான்.

சராசரி இங்குள்ள தமிழர்கள் 900 டொலர் உழைத்துக்கொள்ளலாம். அதில் வீட்டுவாடகை 450 டொலரளவில் வேண்டும். சாப்பாடு ஒரு ஆளுக்கு 200 டொலர். வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டித்தான் அங்குள்ளவர்கள் பணத்தை அனுப்புகிறார்கள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்.

இங்கு உழைக்கும் பணத்தில் 25 வீதம் வரி செலுத்த வேண்டும். மொத்தமாக குடும்பமாகவுள்ள தமிழர் தமது குடும்பத்தை பராமரிக்க ஒரு நாளைக்கு 16 மணித்தியாலங்கள் தொழில்செய்யவேண்டும்.

இங்கு ஒரு மாதம் குளிர் காலமாகும். டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் பனிக்கட்டி உருகும் காலமாகும். அதே ஒரு வேதனை.

ஐந்து இலட்சம் செலவழித்து அங்குபோய் என்னத்தைச் சாதிக்கிறார்கள். அங்குள்ள தமிழர்களை விசாரித்தால்தான் அங்குள்ள நிலைமைகள்பற்றி அழகாகச் சொல்வார்கள்.

### தமிழ் இளைஞர் கருத்து

இந்த நாட்டில் இளைஞர்கள் பங்கு முக்கியமானது. இந்த இளைஞர்கள் அற்ப சலுகைக்காக ஒருகுறுகிய நோக்கத்தின் பொருட்டு வெளிநாடு செல்கிறார்கள். அங்குள்ளவர்கள்பற்றி இந்த மண்ணைப்பற்றி, எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கிறார்களா? இல்லவே இல்லை.

### மணிசேகரன்

இங்கு இளைஞர்கள் குறைவு. ஒரு காலத்தில் இங்கு தொழில்களுக்கும் வேலைகளுக்கும் இளைஞர்களை தேடுவது கஷ்டமாக வரும். நீண்டகாலப் பார்வையில் இந்த மண்ணை நாங்கள் காப்பாற்றுவதற்கு இளைஞர்கள் பணி அவசியம் இங்கு தேவைப்படுகிறது.

வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்களின் பிள்ளைகள் அங்குள்ள மொழிகளில்தான் (பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மன்) பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் ஒருகாலத்தில் தாங்கள் தமிழர்கள் என்று கூறுவார்களோ யாருக்குத்தெரியும்.

வெளிநாடுஎன்ற போர்வையில் தமிழினம் அழிந்து போகின்றது. இவர்களைத் தடுத்துநிறுத்தி எமது மண்ணை வளம்படுத்தவேண்டும். இந்த மண்ணை நேசிப்போம், பாதுகாப்போம், வளம்படுத்துவோம். (152)

## இராசி பலன்

09-01-1991

புதன்கிழமை

நவமி பகல் 2-32 வரை, சுவாதி வைகறை 4-48 வரை. சித்தயோகம், இராகுகாலம் பகல் 12-83 முதல் 1-59வரை. நல்ல நேரம் காலை 6-30 முதல் 7-42 வரை.

மேடம்- அவசியமற்ற பயணம், புதிய முதலீடு, அதிஸ்ட வாய்ப்பு, தாராளமான பணப்புழக்கம்.

இடபம்- எண்ணம்போல வாழ்வு, தொழில் வாய்ப்பு, குடும்ப அமைதி, காரியசித்தி, புகழ்.

மிதுனம்- விரோதியைவெல்லுதல், சளி தொல்லை, குடும்ப பிரிவு, கடின உழைப்பு.

கடகம்- பிரயாணத்தால் அலைச்சல், கருத்து மோதல், வாக்குக்கலகம், குடும்பபகை, மனக்குறை.

சிங்கம்- உடல் சோர்வு, மனைவி வழியால் விரயம், உறவினர் வருகை, தொழில் லாபம், புதிர்போடுதல்.

கன்னி- மாமியார்தொல்லை, தொழில் ஆதாயம், காரிய தாமதம், நிம்மதிக் குறைவு, அகாலபோஜனம்.

துலாம்- வாக்கு வன்மை, அரசியல் லாபம், கடின உழைப்பு, குடும்ப மகிழ்ச்சி, புதிய ஸ்தானம்.

விருச்சிகம்- நரம்புக் கோளாறு, வைத்தியச்செலவு, குடும்ப பிரிவு, புத்திரர்கவலை, காரியதாமதம்.

தனுசு- தெய்வீக செலவுகள், தொழில் லாபம், செல்வாக்கு, கோபதாபம், விருந்துபசாரம்.

மகரம்- படபடப்பு, கண்ணில் ரோகம், குடும்ப கவலை, காரிய வெற்றி தொழில் குறைவு.

கும்பம்- அநாவசிய குழப்பம், கணவரால் தொல்லை, குடும்ப மனஸ்தாபம், தொழில் கஷ்டம்.

மீனம்- கைப்பொருள் நழுவல், சென்ற இடத்தில் துன்பம், அநாவசிய செலவு, மறைமுக எதிர்ப்பு, தாமதம்.

'ஜோஸ்யர்'

## அச்சுவேலியில் புதிய உ. அ. அ. காரியாலயம்

(அச்சுவேலி)

வலி. கிழக்கு வடபகுதிக்கான புதிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அச்சுவேலியில் செயற்படவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவை வலி. கிழக்கு வடபகுதி, வலி. கிழக்கு தென்பகுதி என இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பிரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் தென்பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கோப்பாயிலும், வடபகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அச்சுவேலியிலும் செயற்படவுள்ளன.

அச்சுவேலியில் செயற்படவுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கப்படும் வரை வசதியான ஒரு இடத்தைத் தெரிவு செய்வதில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## நூல்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய விடுதியில் தங்கியுள்ள அநாதைப்பிள்ளைகளை சிவதர்மவள்ளல் திரு க. கனகராசா சந்தித்து சவர்க்காரம், துவாய், சமய அறிவு நூல்கள் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்தார். (154)

## பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை முறிவுதறிவு வைத்திய பகுதியினால் வழங்கப்பட்ட ஊன்றுகோல்களை தற்பொழுது உபயோகிக்காமல் வைத்திருப்பவர்கள் அவற்றை மீண்டும் யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைத்து உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்

மரத்தால் அல்லது அலுமினியத்தால் செய்யப்பட்ட ஊன்றுகோலுக்கு தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (153)

## பலதும் பத்தும்

### 'எர்ஷாத்'தின் சொத்துக்கள்!

பங்களாதேஷ் உலக நாடுகளில் மிக வறிய நாடு. பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் அரச சொத்துக்களை மோசடிசெய்ததாகவும் முறைகேடாக நடந்து கொண்டதற்காகவும் டிசம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி வரை இடைக்கால அரசினால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரது வீட்டை சோதனையிட்ட பொலிஸார் ஐம்பது கோடி பெறுமதியான பணம், நகை, அலங்கார ஆடம்பர பொருட்களைக் கைப்பற்றியுள்ளார்கள். இவரது வீட்டில் ஐம்பத்திமூன்று லட்சம் அமெரிக்க டொலர், ஒரு லட்சத்து தொண்ணூற்றி நாலாயிரம் டொலர் வைர நகைகள், நூற்றிஅறுபத்திநாலு மின்னியல் பொருட்கள், தொளாயிரத்தி எழுபத்தியொரு அலங்கார ஆடைகள், இரண்டாயிரத்தி அறுநூற்றிப்பதினாலு வேறு பொருட்கள், பதினாலு ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அவரது வீட்டில்தான் 72 அங்குல தொலைக்காட்சியும் இருந்தது. அறுபது வயதான எர்ஷாத்துக்கு இந்த ஆசை ஏன் வந்ததோ தெரியவில்லை.

'ஞானி'

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை கிழக்கில் சாத்தியமில்லை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கான சாத்தியமே இல்லையென அங்கிருந்து வருவோர் பலர் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தின் துணையுடன் முஸ்லிம்கள் தமிழ்ப் பகுதிகளில் பெரும் அட்டகாசத்தில் ஈடுபடுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம் ஊர்காவல்படையாலும், முஸ்லிம்களினாலும் கிழக்கில் தமிழர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் கூறினார்கள். (சி)

## கொழும்பு செல்லும் பயணிகள் அதிகரிப்பு

(பூநகரி)

போர் நிறுத்த காலத்தில் வெளிநாடு செல்வதற்கும், வெளிநாட்டிலுள்ள உறவினர்களுடன் தொடர்பு கொண்டு கதைப்பதற்கும் கொழும்பு செல்லும் பயணிகள் தொகை தினமும் அதிகரித்து வருகின்றது.

இதனால் படகில் தங்க இடவசதிகள் இல்லாமல் பயணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

அத்தோடு தினமும் வடக்கிலிருந்து பிரயாணிகள் கொழும்பை நோக்கிச் சென்றவண்ணம் உள்ளனர்.

இதனால் அங்குசெல்லும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் சோதனையிடப்பட்டு வருகின்றனர். சிலர் பொலிசாரால் அழைத்துச் செல்லப்படுவதாகவும் பொலிசாருடன் நேரில் தொடர்புகொள்வதன் மூலம் விசாரணைக்குபின் உடன் விடுதலைசெய்யப்படுகிறார்கள் என்றும் கொழும்பிலிருந்து பூநகரிக்கு வந்த பயணிகளில் ஒருவர் தெரிவித்தார்.

## இராணுவச் சூட்டு 3 புலிகள் காயம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரணில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று போராளிகள் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை பாரதிதாசன் என்பவரும், நேற்று முன்தினம் சகீர், துஸ்பார் ஆகியோரும் பாதுகாப்பு அரணில் நின்றபோது இராணுவம் சுட்டதில் காயமடைந்தனர். (வி

## அகதிகளுக்கு தற்காலிக வீடுகள் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் வீடுகள் முற்றாகச் சேதமடைந்த அகதிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளை குருநகர், வேலணை ஊர்காவற்றுறைப் பகுதிகளில் அமைத்துக் கொடுக்க முடிவுசெய்துள்ளன.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது. (153)

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட நிறுவை அளவை பகுதியினர் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் தராசு, படிகள் மற்றும் சகல நிறுவை அளவை உபகரணங்களுக்கும் இவ்வாண்டுக்கான முத்திரையிடும் வேலைகளை ஆரம்பிக்கவுள்ளனர். (153)

## கமநல சேவை நிலையத்தில் கடமையாற்ற வேண்டும்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் கிராமசேவை அலுவலர்கள் அனைவரும் வாரம்தோறும் வியாழக்கிழமைகளில் தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் கடமையாற்றவுள்ளனர்.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் கிராமசேவை அலுவலர்களாக பதவிமாற்றம் செய்யப்பட்டதைதொடர்ந்து பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட கடமைகளைச் செய்வதற்காக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராமசேவை அலுவலர்களும் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமைகளில் தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் கடமையாற்றவுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

## கப்டன் பண்டிதர் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

கப்டன் பண்டிதரின் 6-வது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் நிதி மற்றும் ஆயுத பராமரிப்புக்கு பொறுப்பாக இருந்த இவர் 1985ம் ஆண்டு ஆவரங்காலில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது வீரமரணமடைந்தார்.

இச்சம்பவத்தில் பண்டிதருடன் வீர மரணமடைந்த 5 வீரவேங்கைகளினதும் நினைவு தினமும் அனுஷ்டிக்கப்படுகிறது. (வி)

## ஹெலி மூலம் கலண்டர்

[நல்லூர்]

யாழ். நகர்ப்பகுதியில் நேற்று மாலை ஹெலியிலிருந்து கலண்டர் மற்றும் கொழும்பு ஆங்கிலம் தமிழ் பத்திரிகைகளில் வந்த செய்திகள் 'போட்டஸ்ரற்' செய்யப்பட்டதுண்டுப் பிரசுரமும் போடப்பட்டன. (153)

### நாளை முதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று அங்கத்தவர் குடும்பத்துக்கு 5 கி. மா, 2 கி. சீனி, ½ கி பருப்பு, 1 கி. பால்மா, ¼ லீற் மண்ணெண்ணை தேயிலை சவர்க்காரம் ஆகியவையும் விநியோகிக்கப்படவிருக்கிறது.

நான்கு அங்கத்தவர் குடும்பத்துக்கு 6 கி. மா. 2½ கி. சீனி, ¾ கி பருப்பு. ஒரு கி. பால்மா, 1/4 லீற். மண்ணெண்ணை மிகுதிக்கு தேயிலை சவர்க்காரம் வழங்கப்படவுள்ளது.

ஐந்து அங்கத்தவர் குடும்பத்துக்கு 9 கி. மா, 3 கி. சீனி, 1 கி. பருப்பு, 1 கி. பால்மா, 1/4 லீற். மண்ணெண்ணை, மிகுதிக்கு தேயிலை சவர்க்காரம் முதலிய சில்லறைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது. (153)

## புலிகள் விடயத்தில் தமிழக அரசு நடவடிக்கை திருப்தியளிப்பதாக இல்லை - இந்திய பிரதமர்

(புதுடில்லி)

'விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாக இல்லை'' என்று இந்தியப் பிரதமர் திரு சந்திரசேகர் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்ற மாநிலங்களின் அவையில் உறுப்பினர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையைச் சரியான விதத்தில் கட்டுப்படுத்தவில்லை என்பதற்காகத் தி.மு.க. அரசு பதவி நீக்கம் செய்யப்படமாட்டாது என்றும், தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகளின் நடவடிக்கை குறித்து மத்திய அரசுக்குத் திட்டவட்டமான தகவல்கள் உள்ளன என்றும் அவர் மேலும்தெரிவித்தார் (க)

### போர் ஓய்வை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஹெலிகொப்டர் ஒன்று வழங்கவும் இலங்கை அரசு தயாராக இருந்தது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் இதற்கான இந்த மறுப்புக் கடிதம் இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ரி)

### வளைகுடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு, உணவு அமைச்சு. எரிபொருள் அமைச்சு, சுகாதார அமைச்சு, வர்த்தக வியாபார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, தொழில், தொழில் பயிற்சி அமைச்சு ஆகியனவே அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்ட அமைச்சுக்களாகும். (எஸ்)

### வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள்நாயகம் சரித்ரத்தவத்தை நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

ஒருவார காலத்தில் 200 லொறிகள் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றுள்ளதாகவும் அவர் கூறினார். [எஸ்]

## பொதுமகன் மீது ரெலோ தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டு மாவட்டத்திலுள்ள குருக்கள் மடத்தில் ரெலோவினரால் பொதுமகன் ஒருவர் தாக்கப்பட்டு காயமடைந்தார்.

கடுமையான தாக்குதல் காரணமாக இந்தப் பொதுமகன் ஆபத்தான நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (வி)

### விடுதலைப்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

சரிப்பதாக அறிவித்திருந்த ஒரு தரப்பான யுத்தநிறுத்தம் சரணடைவதான ஒரு நடவடிக்கையாகும்.

அவர்களை எதிர்த்துச் சண்டையிட விரும்பும் பாதுகாப்புப் படையினரைத் தம்மால் நிறுத்திவைக்கமுடியாது என்றும் அடுத்த இரண்டு வாரத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் படையினர் தீவிர தாக்குதலை நடத்தலாம் என்றும் திரு. ரஞ்சன் தெரிவித்தார். (சி)

### யாழ்-கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞேர் தினமும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமப்படுகிறார்கள்.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வருபவர்களும் வவுனியாவில் தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

இந்தப் பிரயாணிகள் அங்குள்ள முஸ்லிம் வியாபாரிகளிடம் ஏதாவது பொருள் கொள்வனவு செய்தால் இலகுவாக பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

இதனால் 35 ரூபா முதல் 45 ரூபா வரை விற்பனைசெய்யப்படும் சோற்றுப் பார்சல் உட்பட முஸ்லிம்களிடம் இருந்து பல பொருள்களைப் பிரயாணிகள் கொள்வனவு செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். (வி)

### பெண் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிலையில் பாலியல் வன்முறைக்குட்படுத்தினர்.

இதனைத் தடுக்கமுயன்ற அப்பெண்ணின் கணவரை ரெலோ உறுப்பினர் கண்மூடித்தனமாகத் தாக்கி படுகாயம் விளைவித்ததுடன், அந்த வீட்டிலுள்ள இரு ஆடுகளையும். பல கோழிகளையும் பிடித்துச் கொண்டு சென்றனர். [வி]

## 800 மாணவர்கள் மருத்துவபீடத்திற்கு தெரிவு

[கொழும்பு]

கடந்த வருடம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முப்பத்தையாயிரம் மாணவர்களில் இருபதினாயிரம் பேர் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர், இவ்வருடம் மருத்துவ பீடங்களுக்கு எண்ணூறுபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

இத்தகவல்களை பல்கலைக்கழக மானிய குழுத்தலைவர் பேராசிரியர் அலுவிகார தெரிவித்துள்ளார். அவர் மேலும் தகவல் தருகையில்:

தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேர் தடுப்பு முகாம்களில் இருப்பதாகவும் இவர்களது நலன்கள் பேணப்படுவதாகவும் தொடர்ந்து கல்வியைத் தொடர இவர்கள் விடுவிக்கப்படவிருக்கபதாகவும் கூறினார். (எஸ்)

### நுவரெலியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமாக மலையக தொழிற்சங்கங்கள் தேர்தல் ஆணையாளரிடம் புகார் செய்துள்ளன. (153)

### தீவிர

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தப்பட்டுவருவதாக காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. தேவாரம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் 30 சோதனைச் சாவடிகளிலும் 1000 காவல படையினர் பணியில் நேற்று முதல் ஈடுபட்டுவருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் இருக்கும் படையினரிடம் நவீன ரக ஆயுதங்கள் இருக்கும் என்றும் அவர்தெரிவித்தார். (ரி)

## நோயாளர் பராமரிப்பு பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களுக்கான நோயாளர் பராமரிப்பு பயிற்சி நெறி நேற்றுமுதல் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றுவருகிறது.

ஒரு மாத காலத்திற்கு 45 தொண்டர்களுக்கு இப்பயிற்சி நடைபெறவிருக்கிறது. [133]

## குமண கப்பலில் அடையாள அட்டைகள் பென்சன் வவுச்சர், தபால் பொதிகள் வரும்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பலில் 1,435 மெற்றிக் தொன் அரிசி, 786 தொன் கோதுமை மா, 400 மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் பருப்பு ஆகிய உலர் உணவுப் பொருள்கள் வருகின்றன.

யாழ் நகரிலுள்ள நான்கு வங்கிகளுக்கு இம்முறை பணம் கொண்டுவரப்படுகின்றது; இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கிகள் ஆகியவற்றுக்கே இம்முறை பெரும் தொகையான பணம் வருகிறது.

யாழ் மாநகரசபைக்கும் பணம் வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளின் தேசிய அடையாள அட்டைகள் அடங்கிய பார்சலும், பென்சன் வவுச்சர்களும், தபாற் பொதிகளும் கொண்டுவரப்படுகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு35ஒட்சிசன்சிலிண்டர்களும், சுகாதாரப் பணிப்பாளரின் நிர்வாகத்தினுள் அடங்கிய வைத்தியசாலைகளுக்கு மருந்து வகைகளும் வருகின்றன. 12 நோயாளர்களும் இக்கப்பலில் வருகிறார்கள். (153)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## மட்டக்களப்பு ஆசிரியருக்கு 2 வருட சம்பளமுற்பணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இரண்டுவருடசம்பள முற்பணத்தையும், ஆறுமாத கால சம்பள முற்பணத்தையும் வழங்க கல்வியமைச்சு உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது. [எஸ்]